1975 ஏப்ரல் 11]

திரு. என். கே. பழனிசாமி : இதுவரை எவ்வளவு கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது ? எந்தளவிற்கு லாபகரமாக அது வேலை செய்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தமிழ்நாடு முதலீட்டுக் கழகம் ரூ. 11 லட்சம் நிதி உதவி வழங்கியது. ரூ. 7.25 லட்சம் இதுவரையில் கொடுக்கப்பட்டிருக்கிறது, இந்த நிறுவனத்தை விரிவுபடுத்தும் திட்டத்திற்காக இறக்குமதி செய்யப் படவிருக்கும் இயந்திரம் இன்னும் வராததால் எஞ்சிய ரூ. 3.75 லட்சம் இன்னும் கொடுக்கப்படவில்லை. இந்த நிறுவனத்தின் நிதி நிலைமை போதுமானதாக இல்லை என்ற விவரம் கொடுக்கப் பட்டிருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : நமது மாநிலத்தில் கடிகாரங்கள், மேஜை கடிகாரங்கள் தயாரிக்கும் நிறுவனம் தற்போது எந்த இடத்தில் நிறுவப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : டைம்ஸ் எய்ட் இந்தியா என்பது டி. டி. கே. குரூப். இது கடிகாரங்கள் தயார் செய்து வருகிறது. 96,000 கடிகாரங்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இடம், சென்னை.

Sodium Dichromate Unit, Wallajahpet

*656 *Q*.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

(*a*) whether the Sodium Dichromate Unit at Wallajahpet, has commenced production; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) வினவிற்கு இடமில்லை.

திரு. கே. எ. வகாப் : அங்கு இரண்டு தொழிற்சாலைகள் உள்ளன. ஒன்று புதிதாக ஸிப்காட்-ல் வந்துகொண்டிருக்கிறது. பத்து லட்சம் ரூபாய் முதலீடு உள்ள முதல் தொழிற்சாலை இரண்டு மூன்று ஆண்டுகளாக செயல்படாமல் இருக்கிறது. சில நிர்வாகக் கேடுகளால், வாங்கப்பட்ட மெஷினரி சரியாக வேலை செய்யவில்லை. அந்த அதிகாரிகள் பேரில் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன ? அதை வேறு தனியாரிடம் கொடுத்து நல்ல முறையில் நடத்துவதற்கு அரசுமுன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தத் தொழிற்சாலை கே. எஸ். சீதாராமையா அன்ட் ஸன்ஸ், பங்களூர் என்ற நிறுவனத்தை இரண்டு டன் அளவிற்கு நாள் ஒன்றுக்கு உற்பத்தி செய்யச் சொல்லி அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அந்த அளவிற்கு உற்பத்தி செய்ய முடியாமல் இருப்பதாக அரசுக்குத் தெரிய வந்தது. இந்த நிறுவனத்தை எந்த வகையில் சீர்செய்யலாம் என்ற யோசனையும் இருக்கிறது. இதை விற்றுவிடும் செயற்குறிப்பும் அரசிடம் இருக்கிறது. தக்க நடவடிக்கைகள் எடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி : இதில் எவ்வளவு முதலீடு போடப்பட்டிருக்கிறது ? எவ்வளவு ஆண்டுகளாக உற்பத்தி செய்யப்படாமல் இருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ரூ. 4.65 லட்சம் நான்-ரிக்கரிங், ரூ. 3.46 லட்சம் ரிக்கரிங் காஸ்ட். இப்போது இரண்டு மூன்று ஆண்டுகளாக இது நடைபெறவில்லை.

திரு. கே. ஏ. வகாப் : இந்த சீதாராமையா அன்ட் ஸன்ஸ் கம்பெனிக்கு வேலை முடித்தால்தான் பணம் கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் ஒப்புக்கொண்டு என்ன காரணத்தாலோ முதலில் பணம் கொடுத்து விட்டதால் சரியான மெஷினரிகள் போன்றவற்றைப் பொருத்தவில்லை. இதனுல் என் தொகுதியில் ஒரு கெட்ட பெயராகியிருக்கிறது. அரசு முதலீடு போட்டும் செயல்படாமல் இருக்கிறது. ஏற்கனவே இதுபற்றி முன்னுள் தொழில் அமைச்சர் அவர்களிடம் கூறியிருக்கிறேன். எனவே, உடனடியாக தேர்தலுக்குள் இதைப் பைசல் செய்தால் நன்ருயிருக்கும்.

THE HON. THIRU. S. J. SADIQ PASHA : The design, erection and commissioning of the entire plant was entrusted to M/s. K. S. Seetharamiah and Sons, Bangalore on a turn-key basis at a cost of Rs. 2.84 lakhs. The initial 90% payment of the cost, namely Rs. 2.12 lakhs was made to the firm on 2-4-1971 on supply and erection of the various equipment and the balance of 10% of the amount is yet to be paid to the firm as they have not been able to commission the plant and show a production of 2 tonnes of Sodium Dichromate per day as per terms and conditions of supply.

அவர்களால் செய்யமுடியவில்லை என்பதால் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது. இதை விற்றுவிடும் யோசனையும் இருக்கிறது. சில மாற்றங்களைச் செய்ய முடியுமா என்ற குறிப்பும் இருக்கிறது. மாற்றங்கள் செய்வது என்ருல் மீண்டும் எட்டு லட்சம் ரூபாய் செலவாகலாம். எனவே, விற்றுவிடலாம் என்ற யோசனையும் இருக்கிறது.

1975 ஏப்ரல் 11]

(முற்பகல் 9.30)

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, வாலாஜாவில் இருக்கக் கூடிய சோடியம் டைக்ரோமைட் யூட்னி இப்போது வேலை செய்யவில்லை என்று சொன்னாலும் சிப்காட்டில் பெரிய அளவிலே இதே தொழிற்சாலை யூனிட்டை அரசு ஆரம்பிக்க இருக்கிறது. இதற்கான வேலைகளும் நடந்து கொண்டு வருகின்றன. ஆனால் இந்த யூனிட்டில் ஒரு குறிப்பிட்ட இயந்திரம் தான் வேலை செய்யவில்லையே தவிர, கட்டிடம் இருக்கிறது, கிணறுஇருக்கிறது, வாட்டர் சப்ளை நன்றாக இருக்கிறது. ஆகவே, இதே யூனிட்டில் வேறு தொழில், கெமிகல் இண்டஸ்ட்ரீஸ், திறப்பதற்கு அமைச்சரவர்கள் முயற்சி எடுத்துக் கொள்வார்களாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, கூட்டுத் துறையில் தமிழ் நாடு க்ரோமைட்ஸ் அன்டு கெமிகல்ஸ் என்ற நிறுவனத்தின் மூலம் 3,300 டன் பேசிக் க்ரோமியம் சல்பேட் டானிங் பவுடர், 2,500 டன் சோடியம் டைக்ரோமைட், 2,400 டன் பை—ப்ராடக்ட் சல்பேட் உற்பத்தி செய்யக் கூடிய திட்டம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்லிய யோசனையும் அரசின் கருத்தில் இருக்கிறது.

System Improvement Schemes at Hosur

*657 Q.—Thiru G. R. EDMUND : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Electricity Board has been permitted to avail the loans offered by the Rural Electricity Corporation for the System Improvement Schemes at Hosur in Dharmapuri district; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) கிராம மின்வசதிக் கழகம், தருமபுரி மாவட்டத்தில் ஓசூரில் மின் நிலைய மேம்பாட்டுத் திட்டங்களுக்காக ரூ. 8.056 லட்சம் கடன் அனுமதித்துள்ளது. இந்தத் திட்டத்திற்கு முதல் தவணைக் கடன் தொகையாகிய ரூ. 6.042 இலட்சத்தை கிராம மின் வசதிக் கழகம் கொடுத்து விட்டது.

திரு. முனு ஆதி : தலைவரவர்களே, சமயநல்லூரில் முன்பு மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது. இப்போது அங்கே இயந்திரம் மட்டும் இல்லை. மற்ற எல்லா வசதிகளும் இருக்கிற போது இயந்திரத்தை வாங்கி மின்சாரம் உற்பத்தி செய்கிற உத்தேசம் அரசுக்கு உண்டாவென்று அறிய விரும்புகின்றேன்.